# “பால்நிலை சமத்துவம் கொண்ட இளம் ஆளுமை உருவாக்கங்களின் சாதனமாக வசந்தன் கூத்தின் பிரயோகம்”

(மட்டக்களப்பின் கிராமம் ஒன்றினையும் பாடசாலை ஒன்றினையும் அடிப்படையாகக் கொண்ட பங்குகொள் ஆய்வுச் செயற்பாடு)

LIBRARY
23 OCT 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
11 MAY 2018
Vantharumoolai
Chenkalady

துஷ்யந்தி சத்தியஜித்
EU/PGS/2011/M.Phil (DT)/04

M.phil11
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை
கலை கலாச்சார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
இலங்கை

2017

PROCESSED
Main Library, EUSL

# உள்ளடக்கம்

நன்றியுரை

ஆய்வு முன்னுரை

**அத்தியாயம் ஒன்று**

மட்டக்களப்பு பற்றிய கண்ணோட்டம்

1.1 மட்டக்களப்பு ஓர் அறிமுகம்

1.2 இலக்கிய மீளாய்வு

**அத்தியாயம் இரண்டு**

வசந்தன் கூத்து

2.1 வசந்தன் கூத்தின் கட்டமைப்பும், அழகியல் தன்மையும்

2.2 கண்ணகி வழிபாடும் வசந்தன் ஆற்றுகையும்

**அத்தியாயம் மூன்று**

பால் நிலை சமத்துவம் - ஓர் கண்ணோட்டம்

3.1 பால்நிலையும் சிறுவர்களும்

3.2 சிறுவர்சார் கல்விக் கலைச் செயற்பாடுகளில் பால்நிலை சமத்துவத்தின் அவசியம்.

3.3 மட்டக்களப்பில் பால்நிலை சமத்துவ சிந்தனைகளும், செயற்பாடுகளும்.

3.4 கலைசார் கல்விச் செயற்பாட்டில் வசந்தன் கூத்தின் முக்கியத்துவம்.

**அத்தியாயம் நான்கு**

வசந்தன் கூத்தினூடான பால்நிலை சமத்துவமும், ஆளுமை உருவாக்கங்களும்

4.1 வசந்தன் கூத்தினை முன்னெடுத்த விதமும், சிறுவர்களின் அடைவு மட்டங்களும்.

4.1.1 பாடசாலைச் சூழலில் வசந்தன்

4.1.2 ஊர்ச் சூழலில் வசந்தன்

4.2 சிறுவர்களின் அடைவு மட்டங்கள்

4.2.1 குழுச் செயற்பாடுகளினூடான ஆளுமைசார் படைப்பாக்கத்திறன்

4.2.2 வசந்தன் ஆற்றுகையினூடான சமூகப் பெறுமானம்.

**அத்தியயம் ஐந்து**

ஆய்வினூடான அனுபவங்கள்

5.1 புதிய உருவாக்கம்

5.2 சிறுவர்கள் விபரம்

5.3 எதிர்கொண்ட சவால்கள்

5.4 பெற்றோர்களின் மனப் பதிவுகள்

அவதானிப்பும் முடிவுரையும்

துணைநூல் பட்டியல்

ஆய்விற்கான பின்னிணைப்புக்கள்

# ஆய்வு முன்னுரை

## 1. அறிமுகம்

வசந்தன் ஆட்டம் மட்டக்களப்பு பிரதேசத்தில் காணப்படும் பாரம்பரிய கலை வடிவங்களுள் ஒன்றாகும். கண்ணகி அம்மன் சடங்கினை மையமாகக் கொண்டு இவ்வாட்டம் வருடாவருடம் நிகழ்த்தப்படுகின்றது. சிறுவர்கள் கைகளில் இரு தடிகள் கொண்டு இவ் ஆட்டத்திற்கேயுரிய ஆடல், பாடல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இந் நிகழ்த்துகையினை நிகழ்த்துவது வழக்கமாகும். நேர்த்தியாக, விளையாட்டாக அறிவூட்டுவதான அம்சங்களை உடையதாக வசந்தன் ஆட்டம் காணப்படுகின்றது. சமூகம் சார்ந்த, சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளை, அதற்கான தீர்வுகளை, விழிப்புணர்வுகளை மக்களுக்கு இக்கலையின் ஆடல், பாடல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவு படுத்த முடியும் எனத் தெரிகிறது. அத்துடன் இக்கலையினது பாரம்பரிய உடையமைப்பு மருவிவிட்டது. அதனை மீள உருவாக்குதலும் அவசியமானதாகத் தோன்றுகிறது. மேலும் பெண் பிள்ளைகள் பங்குபற்றுதலையும் ஊக்குவிப்பதன் சாத்தியம் பரீட்சிக்கப்பட வேண்டும். ஏனெனில் இயல்பாகவே சிறுவர்கள் எனப்படுவோர் ஆடல், பாடல் விளையாட்டுக்களில் ஆர்வம் உடையவர்களாக காணப்படுகின்றனர். இவ் இயல்புடைய சிறுவர்களை சமுதாயமயப்படுத்த வசந்தன் ஆட்டம் போன்ற கலைகள் முக்கியமானவையாகும்.

எனவே இவை சார்ந்து ஆய்வில் ஈடுபடும் பொழுது இதற்கான சாத்தியப்பாடுகளைக் கண்டு கொள்ள முடியும்.

மாதிரிக்காக இரண்டு இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு சூழலும் வெவ்வேறானவை, இரண்டு பகுதிகளிலும் எவ்வாறு இக்கலை வடிவம் சாத்தியப்படுகின்றது என்பதற்காக பரிசோதனை முயற்சியாக ஆய்வாளர் இதனை எடுத்துள்ளார்.

## 2. ஆய்வுப்பகுதி.

01. மட்/கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயமும்

02. மட்/களுதாவளை 1ம் குறிச்சிப் பகுதியும் ஆய்வுப்பகுதிகளாகும்.

## 3. ஆய்வுப் பிரச்சினைகள், நியாயப்படுத்தலும்

3.1 காலம் காலமாக ஆண் சிறுவர்கள் மட்டுமே இவ்வசந்தன் ஆட்டத்தில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். சிறுவர்கள் எனும்போது அது ஆண், பெண் இருபாலாரையுமே சாரும். இருந்தாலும் ஆண் சிறுவர்கள் அளவிற்கு சிறுமிகள் இதில் பங்கு பற்றுவதும்

இல்லை அவர்களுக்கு கற்பிக்கப்படுவதுமில்லை. கோயில்களில் ஆடுவதற்கும் அப்பால் பெண்கள் இதனை கற்கும் போது இக்கலையினை இதன் அழகியல் வெளிப்பாட்டினை குறித்த ஊரிற்கும் அப்பால் ஆற்றுகை செய்து வெளிப்படுத்த முடியும்.

பொதுவாக ஆடல், பாடல் அம்சங்கள் என்பது ஒருவரிற்கு நல்ல மனநிலையை, சந்தோசத்தை, ஆளுமையை தரக்கூடிய விடயமாகக் காணப்படுகின்றது. மற்றும் ஆடல், பாடலில் ஈடுபடுவதனால் அவர்கள் இயல்பாகவே உடல், உள ஆரோக்கியத்தினைப் பெறும் சாத்தியமும் உண்டு. இருந்தும் பெண் சிறுமிகளிடையே இக்கலை ஊக்கவிக்கப்படாமைக்கு என்ன காரணம் என்பது அறிய வேண்டிய விடயமாக உள்ளது.

3.3 இன்றைய சூழ்நிலையில் சமூகத்திற்கு பல உலக விடயங்களையும், விழிப்புணர்வுகளையும் கொடுக்க வேண்டிய அவசியமுள்ளது. சுற்றுச் சூழல் சார்ந்து பல விடயங்களை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. எனவே குறித்த சமூகத்திற்குரிய ஏலவே ஊடாட்டத்துடன் இருக்கும் கலை வடிவம் மூலம் விழிப்புணர்வை செய்வது என்பது இலகு. அத்துடன் இது இலகுவாக மக்களை சென்றடையும் சாத்தியமுண்டு. ஏனெனில் பாரம்பரிய கலை வடிவமானது மக்களுக்கு பரிச்சயமான ஒன்றாகும். எனவே சமூகம் சார்ந்த கருத்துக்களை விழிப்புணர்வுகளை இவ் வசந்தனாட்டத்திற்குரிய ஆடல், பாடல், விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்துவதுடன் வசந்தன் ஆட்டக்கலைஞர்களைக் கொண்டே அதற்கான பாடல் வரிகளை அமைப்பது என்பதும், புதிய நடன மொழிகளை உருவாக்குவது என்பதும் இன்றைய சூழலில் அவசியமானதாகவுள்ளது.

## 4. நோக்கமும், பரப்பும்

5.1 ஆற்றுகையினூடாக இளம் வயதிலேயே பால் நிலை சமத்துவ எண்ணக்கருவை விதைப்பதுடன் பால் நிலையில் சமநிலை நோக்குடைய ஆண், பெண் சிறுவர்களை உருவாக்குதலும், உற்சாகப்படுத்துதலும்.

5.2 ஆண், பெண் இருபாலாரிடமும் மண் சார்ந்த, மக்கள் சார்ந்த கலை ஆர்வத்தினை ஏற்படுத்துதல்.

5.3 உடல், உள சமநிலையினை, ஆரோக்கியத்தை பெறும் வகையில் சிறுமிகளையும் இவ்வாற்றுகையில் ஈடுபட வைத்தல்.

5.4 இக்கலைக்கே உரித்தான பாரம்பரிய உடையமைப்பை உருவாக்குதல்.

5.5 அனுகூலமான விடயங்களை உரையாடி சமூகப் பிரச்சினை ஒன்றினை ஆற்றுகையினூடாக வெளிக்கொணரல்.

## 5. தரவுகளும், முறையியிலும்

### 5.1 முதனிலைத் தரவுகள்.

5.1.1 குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் வாழும் பாரம்பரிய கலைஞர்கள், துறைசார் அறிஞர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது மக்களுடனான உரையாடல்கள், நேர்காணல்கள் மூலம் பெறப்படும் தரவுகள்.

5.1.2 பங்கு கொள் ஆய்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள், ஈடுபடுபவர்களுடனான கலந்துரையாடல்கள்.

### 5.2 இரண்டாம் நிலைத் தரவுகள்

வசந்தன் கூத்து சார்ந்து வெளி வந்த நூல்கள், இறுவெட்டுக்கள், புகைப்படங்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்படுகின்றன.

**முறையியல்**

பங்குபற்றல் அரங்க ஆய்வுச் செயற்பாடு.

ஒப்பீட்டு ஆய்வுச் செயற்பாடு

## 6. எதிர்பார்க்கும் விளைவுகள்.

எடுத்துக் கொண்ட ஆய்வுப் பிரச்சினைகளை வெற்றிகரமான நடைமுறையில் கையாண்டு ஆய்வு நோக்கங்களை அடைவதனூடாக வசந்தன் கூத்தினை இன்னுமொரு படிநிலைக்கு வளர்த்தெடுக்கவும் முன்னெடுக்கவும் கூடியதாக இருக்கும்.

## 7. போதாமைகளும், மட்டுப்பாடுகளும்.

8.1 சிறுமிகள் இக் கூத்தினை ஆற்றுகை செய்யத் தயங்குதல், இடைஞ்சல்கள்.

8.2 குறித்த பிரதேசதில் இக்கலையினை முன்னெடுப்பவர்களின் தயக்கங்கள்.

8.3 பொருளாதாரத் தடைகள்.

## 8. ஆய்வு பகுப்பு

1. முதலாம் அத்தியாயத்தில் மட்டக்களப்பு பற்றிய அறிமுகமும், வசந்தன் கூத்து பற்றிய இலக்கிய மீளாய்வும் இடம்பெறுகின்றது.

2. இரண்டாவது அத்தியாயத்தில் மட்டக்களப்பு வசந்தன் கூத்து ஓர் பரந்த பார்வையாக பார்க்கப்பட்டுள்ளது. இதன் கட்டமைப்பு அழகியல் தன்மை, வேறு இடங்களில் காணப்படும் வசந்தனுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமை மற்றும் கண்ணகி வழிபாடோடு வசந்தன் கூத்து கொண்டுள்ள தொடர்பும் ஆராயப்பட்டுள்ளன.

3. மூன்றாவது அத்தியாயத்தில் பால்நிலை சமத்துவம் - ஓர் கண்ணோட்டம். என்பதனுள் பால்நிலை சமத்துவம் என்றால் என்ன சிறுவர்களுக்கு அதன் அவசியம் பற்றியும், கல்வி கலைச் செயற்பாடுகளில் பாடசாலையை மையைப்படுத்தி பால்நிலை சமத்துவத்தின் அவசியம் பற்றியும் வசந்தன் கூத்து , கலை செயற்பாட்டில் ஏன், எவ்வாறு உள்வாங்கப்பட வேண்டும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

4. நான்காவது அத்தியாயத்தில் வசந்தன் கூத்தினை மையப்படுத்திய சிறுவர்களுடனான செயற்பாட்டினூடாக வசந்தன் கூத்தினை முன்னெடுத்த விதமும் அதனூடாக சிறுவர்களின் அடைவு மட்டங்களும், சிறுவர்களின் ஆளுமை வெளிப்பாடுகளுக்கான வசந்தன் கூத்தின் பிரயோகம் பற்றியும் எவற்றினால் இவை சாத்தியப்பட்டன என்பது பற்றியும் விளக்கப்பட்டுள்ளன.

5. ஐந்தாவது அத்தியாயத்தில் பால் நிலை சமத்துவத்துடன் உருவாகிய வசந்தன் கூத்துச் சிறுவர்களால் பாரம்பரிய வசந்தனின் தாளக்கட்டுக்கள், மெட்டுக்களை அடியொட்டிய புதிய உருவாக்கங்களும், சிறுவர்களது விபரங்களும், இவ்வாய்வில் ஆய்வாளர் எதிர்கொண்ட சாவல்களும் கூறப்பட்டுள்ளன.